வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    05.10.2024 சனிக்கிழமை    இதழ் : 279    பக்கங்கள் : 12

# மாகாண தேர்தலை நடத்தி 13ஐ நடைமுறைப்படுத்துக!

## ஜனாதிபதியை கோரினார் ஜெய்சங்கர்

கொழும்பு, ஒக்ரோபர் 05

**மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவது அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த உதவும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.**

நேற்றைய தினம் இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்துப் பேசினார். இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

"இலங்கையின் ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றை பேணும் அதே வேளை, தமிழர்கள் உட்பட அனைத்து சமூகத்தினரினதும் சமத்துவம் - நீதி - கௌரவம் - சமாதானம் ஆகியவற்றுக்கான அபிலாசைகளுக்கு இந்தியா ஆதரவளிக்கின்றது.

"அரசமைப்பின் 13ஆவது திருத் தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

11



## பாராளுமன்றத் தேர்தல்:
# தமிழ் அரசுக் கட்சி தனித்தே போட்டி!

யாழ்ப்பாணம், ஒக். 05

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்தே போட்டியிடுவது என்று அந்தக் கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்றுமுன்தினம் இரவு மெய்நிகர் வழியே கூடியது.

இந்தக் கூட்டத்தில், அம்பாறை, திருகோணமலையில் கூட்டாகப் போட்டியிட முன்வைக்கப்பட்ட ஆலோசனை தொடர்பில்

11

# தமிழ் அரசு கட்சியின் வேட்பாளர் தெரிவுக்குழு இன்று கூடுகின்றது

யாழ்ப்பாணம், ஒக். 05

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான நியமனக் குழு இன்று சனிக்கிழமை வவுனியாவில் கூடுகின்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்றைய தினம் மெய்நிகர் வழியில் கூடியிருந்தது. இதன்போது, 11 பேர் கொண்ட வேட்பாளர் தெரிவுக் குழுவுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இதையடுத்து, வேட்பாளர் தெரிவுக் குழு இன்றைய தினம் முதன்முறையாக வவுனியாவில்

11



# ரணில், சஜித், அரச தரப்பினரை நேற்று சந்தித்தார் ஜெய்சங்கர்!

கொழும்பு, ஒக். 09

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் பிரதமர் ஹரிணி உள்ளிட்ட அரச தரப்பினரையும் முன்னாள் ஜனாதிபதி ரணில், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆகியோரை நேற்று சந்தித்துப் பேசினார்.

நேற்று வெள்ளிக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த இந்திய வெளிவிவகார அமைச்சரரை நாட்டின் வெளிவிவகார செயலர் அருணி விஜயவர்த்தன, இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோர் வரவேற்றனர்.

முதலில் வெளிவிவகார அமைச்சர் விஜித

11

# தமிழ் அரசியல் கட்சிகளை ஜெய்சங்கர் சந்திக்கவில்லை!

கொழும்பு, ஒக். 05

இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினரை சந்திக்காமலேயே தனது பயணத்தை நிறைவு செய்தார்.

நேற்றைய தினம் நாட்டுக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரை சந்தித்து பேச்சுகளை நடத்தினார். அத்துடன், மிலிந்த மொறகொடவின் பாத்பைண்டர்

11

# கைபேசி விளையாட்டு சிறுவனுக்கு எமனானது!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாணத்தில் கைபேசி விளையாட்டுக்கு அடிமையான சிறுவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். யாழ்ப்பாணம் நகரை அண்மித்த பாடசாலையில் தரம் 11இல் கல்வி கற்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறித்த சிறுவன் கைபேசி விளையாட்டுக்கு அடிமையாகியுள்ளார். இதனால், அவர் கடந்த 3 மாதங்களாக பாடசாலைக்கு செல்லவில்லை. இது தொடர்பில், அந்தப் பகுதி கிராம சேவகர்,

11

## முதன்மை வேட்பாளர் விவகாரத்தால்:
# இழுபறி நிலைமையில் தமிழ் மக்கள் கூட்டணி!

யாழ்ப்பாணம், ஒக். 05

முதன்மை வேட்பாளர் விவகாரத்தால் தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் தெரிவு இழுபறி நிலைமையில் உள்ளதாக அறிய வருகின்றது.

கடந்த 30ஆம் திகதி திங்கட்கிழமை கூடிய தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை தனித்து தமது மான் சின்னத்தில் போட்டியிடுவது என்று முடிவு செய்தது. அத்துடன்

11

# நிபந்தனை அடிப்படையில் 50 இந்திய மீனவர் விடுதலை

## 5 பேருக்கு சிறைத் தண்டனை

- எஸ். தில்லைநாதன் -

யாழ்ப்பாணம், ஒக். 05

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் கைதான 50 இந்திய மீனவர்களை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்த சிறைத் தண்டனையுடன் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றங்கள் விடுதலை செய்துள்ளன. அத்துடன், ஐவருக்கு சிறைத் தண்டனையும் விதித்துள்ளன.

எல்லை தாண்டி வந்து மீன்பிடித்தனர் என்ற

11

# இந்தியாவுக்கு வருமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு

கொழும்பு, ஒக். 05

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை இந்தியாவுக்கு வருகை தருமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.


நேற்றைய தினம் நாட்டுக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் இந்தியப் பிரதமரின் அழைப்பை ஜனாதிபதி

11

# சர்வதேசம் அநுரவுக்கு ஆதரவளிக்கவேண்டும்

## எரிக் சொல்ஹெய்ம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 05



ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும். அவரின் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் சிறப்பாக அமைந்துள்ளன என்று இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது சமூக ஊடகப் பதிவிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டும். இலங்கையின் புதிய

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம். முன்னர் தமிழ் அரசு கட்சியின் எம். பியாகவும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் எம். பியாகவும் இருந்தவர். தமிழ் அறிஞரான அவர் திருக்குறளின் பெருமைகளை உலகறியச் செய்வதற்காக உழைத்தவர். தொடர்ச்சியாக திருக்குறள் மாநாடுகளை உலகம் எங்கும் நடத்தியவர். எழுபதுகளின் கடைசிக் காலத்தில் வேலணையில் ஒரு திருக்குறள் மாநாடு. மூன்று நாட்கள் நடந்த அந்த மாநாட்டில் ஒருநாள் நடைபெற்ற கவியரங்கில் ஓர் இளம் கவிஞர் கவிதை பாடிக் கொண்டிந்தபோது மாநாட்டு மண்டபத்தில் சலசலப்பு.

மாநாட்டின் தொண்டர்கள் கவிதை படித்துக்கொண்டிருந்த கவிஞரை, குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டுபோய் மாநாட்டு மண்டபத்திலிருந்து வெளியேற்றினர்.

அவர் படித்த கவிதையில் "கேட்டது தமிழீழம், கிடைத்தது ஜீப் வண்டிகள்..." என்ற வரிகள் மட்டும் இப்போதும் ஞாபகத்தில் உண்டு.

அப்போது ஜே. ஆர். ஜனாதிபதியாக இருந்தார். அவரே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரிகள் இல்லாது வாகனங்களை வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தவர். அப்போது எம். பிக்கள் எல்லோருக்குமே ஒரே மாதிரியான ஜீப் வண்டிகள் வரியில்லாது வழங்கப்பட்டன. அதற்காக அவை இலவசமாக வழங்கப்படவில்லை. வரிகள் மாத்திரமே சலுகையாக வழக்கப்பட்டன. அவற்றை வெளிநாட்டில் வாங்கிக் கொண்டுவந்து சேரும்வரையான விலைக்கு வழங்கப்பட்டதுடன், அவர்களின் சம்பளத்திலிருந்து அவை கட்டுப் பணத்துக்கு வழங்கப்பட்டன. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பின்னர் தமது அன்றாட அலுவல்களை அந்த ஜீப் வண்டியில் ஓடி ஓடியே கவனித்து வந்தார்.

அந்த நடைமுறை பின்னர் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். பிற்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாகனங்களை இறக்குமதி செய்துகொள்வதற்கான 'பெர்மிட்'டுகள் மட்டுமே வழங்கப்பட்டன. நமது எம். பிக்களோ அவற்றை வேறு ஒருவருக்குக் கொடுத்து பல கோடி ரூபாய்களை - அதாவது, அவர்களுக்கு கிடைக்கும் வரிச் சலுகையை தமக்கான வருமானமாகப் பெற்றுவந்தனர்.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கிய பின்னர் கோட்டாபய ஆட்சிக் காலத்தில் - அதாவது கடந்த பாராளுமன்றத்தில் மட்டுமே உறுப்பினர்களுக்கு அதற்கான 'பெர்மிட்' வழங்கப்படவில்லை.

இப்போது, அதனை ஈடுசெய்யும் வகையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம். பிக்களுக்கு மதுபானசாலைகளுக்கான அனுமதி வழங்கியமை பற்றியே இன்று அதிகம் பேசப்படுகின்றது. மதுபானசாலை பற்றி பேசுகின்றபோது சில வருடங்களுக்கு முன்னர் நமது தலைவர் ஒருவர் பகிரங்கமாக விடுத்த கோரிக்கை ஒன்று ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்து விட்டது என்றும் அதனைத் தடுப்பதற்காக கிளிநொச்சியில் மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கவேண்டும் எனவும் அந்த மக்கள் பிரதிநிதி கோரிக்கை விடுத்தார். அப்போது, கிளிநொச்சியில் மதுபானசாலைகள் எதுவும் இருக்கவில்லை. அதாவது, மதுப்போத்தல்கள் விற்பனை செய்யும் வியாபார நிலையங்கள் இருக்கவில்லை. அவர் அப்போது இப்படியொரு கோரிக்கையை முன்வைத்தபோது யாரும் அது தவறு என்று கண்டிக்கவில்லை - ஏன் கண்டுகொள்ளவே இல்லை. அதற்குக் காரணம் கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் நடந்து கொண்டிருந்த கசிப்பு உற்பத்திதான்.

தமிழ் எம். பிக்கள் சிலருக்கு இந்த மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை ரணில் வழங்குவது பற்றிய செய்திகள் வெளிவரத் தொடங்கியதும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனிடம் கேட்டேன், உங்களுக்கும் கிடைத்ததா? என்று. இது பற்றி இந்தப் பத்தியிலும் முன்னர் எழுதியதாக ஞாபகம். அதற்கு அவர் சொன்னார், "என்னிடமும் கேட்டார்கள்தான். ஆனால், பாராளுமன்றத்தில் இருக்கும் இருநூற்றி இருபத்தி ஐந்து எம். பிக்களுக்கும் கொடுக்கப்படுகின்றது என்றால் நான் வாங்கிக்கொள்கின்றேன்" என்று சொன்னாராம். ஆனால், ஒரு சிலருக்கு மாத்திரம் சலுகையாக கொடுக்கப்படுகின்றது என்றால், அதன் அர்த்தம் அவர்கள் அவரிடமிருந்து எதையோ எதிர்பார்க்கிறார்கள் என்பதுதான்.

இப்போது யாரைப் பார்த்தாலும், அதுபற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் இவ்வாறு லைசன்ஸ் பெற்றவர்களின் பெயர் விபரங்களை வெளியிடவிருப்பதாக ஒரு செய்தி வெளிவந்திருந்தது. அந்தச் செய்தி வெளிவந்த பின்னர், தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் எம். பி. சி. சிறீதரன் புதிய ஜனாதிபதி அநுரவை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்ததும் அந்தச் சந்திப்புக்கும் மதுபானசாலை லைசென்ஸுக்கும் முடிச்சுப் போட்டு சமூகவலைத்தளங்களில் பலரும் எழுதிவருகின்றனர். ஆனால், அந்தச் சந்திப்புக்கு இரு தினங்களின் பின்னர், தமிழ் அரசின் மற்றுமொரு மாஜி எம். பியான சுமந்திரனும் புதிய ஜனாதிபதியைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்.

இந்த வேளையில்தான், ஒரு மூத்த ஊடகர் தனது முகநூலில், "வடக்கில் முன்னாள் உறுப்பினர் ...... ஒருவரைத் தவிர மற்றைய அனைவரும் சாராயக் கடை அனுமதி பெற்றவர்களாம்" என்று பதிவிட்டிருக்கிறார்.

காருக்கு 'பெர்மிட்' எடுத்தது போல இவர்கள் "பாருக்கு பெர்மிட்" எடுத்திருக்கிறார்கள் என்று இதனை இனிக் கடந்து போக வேண்டியதுதான்.

காருக்கு பெர்மிட் கொடுப்பது அவர்கள் புதிய வாகனத்தை வாங்கி, தனது மாவட்டம் முழுவதும் ஓடித் திரிந்து மக்கள் பணியாற்றவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், அதனைச் செய்யாமல் அதனை காசாக்கியபோது கண்டுகொள்ளாத நாம் இப்போது மட்டும் எதற்காம்?


**- ஊர்க்குருவி.**

## கல்லுண்டாயில் குப்பைகளுக்கு தீ; வீதியால் சென்ற முதியவர் மயக்கம்!

யாழ்ப்பாணம், ஒக். 05

கல்லுண்டாய் வெளியில் குப்பைகளுக்கு வைக்கப்பட்ட தீயால் அந்தப் பகுதி எங்கும் புகைமூட்டம் எழுந்தது. இதனால், வீதியில் பயணித்த முதியவர் ஒருவர் மயக்கமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,



கல்லூண்டாயில் உள்ள யாழ். மாநகர சபையின் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் பகுதியிலேயே குப்பைகளுக்கு தீ வைக்கப்பட்டது. இதனால், அந்தப் பகுதியில் பெரும் புகைமூட்டம் காணப்பட்டது.

இந்நிலையில், கழிவு சேகரிப்பு நிலையத்துக்கு அருகேயுள்ள வீதியில் சைக்கிளில் பயணித்த முதியவர் ஒருவர் மயக்கமடைந்தார். வீதியில் நின்றவர்கள் அவருக்கு முதலுதவி அளித்து அவரை பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர் என்று தெரிய வருகின்றது.

கழிவுகள் சேகரிப்பு நிலையத்தில் மருத்துவமனை கழிவுகள் உட்பட ஏராளமான கழிவுகள் கொட்டப்படுகின்றன. இவற்றுக்கு தீ வைக்கும் செயலும் அடிக்கடி இடம் பெறுகிறது. இதனால், அந்தப் பகுதியால் செல்வோரும் அயல் சூழலில் வசிப்போரும் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியானது மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குள் காணப்படுகின்றது. இருப்பினும் யாழ்ப்பாண மாநகர சபையினரே அந்த பகுதியில் கழிவுகளை கொட்டுகின்றனர். எனவே, யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளரும் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளரும் இது குறித்து அதிக கவனம் செலுத்தி விரைந்து நடவடிக்கை எடுக்கவேண் டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ- 05)

## பருத்தித்துறை கடற்றொழிலாளர் ஜனாதிபதி அநுரவுக்கு வாழ்த்து!



வடமராட்சி, ஒக். 05

பருத்தித்துறை கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு கோரி மனு ஒன்றும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ. சந்திரசேகரனிடம் வழங்கி வைக்கப்பட்டது.

அந்த மனுவில், வட மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் வகையில், எல்லை தாண்டி வரும் இந்திய இழுவை படகுகளை தடுத்து நிறுத்த வேண்டும், சுருக்குவலை உள்ளிட்ட தடை செய்யப்பட்ட தொழில்களை நிரந்தரமாக தடை செய்ய வேண்டும், போதைப்பொருள் ஒழிப்பு, 16 வயது வரை கட்டாய கல்வி உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

பருத்தித்துறை - கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கொட்டடி கடற்கரையில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## சந்நிதியான் ஆச்சிரமம் நடத்தும் சர்வதேச முதியோர் தின விழா!

வடமராட்சி, ஒக். 05

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ, கலை, பண்பாட்டு பேரவை நடத்தும் சர்வதேச முதியோர் தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓய்வு நிலை மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சிறீநிவாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கருத்துரைகளை ஓய்வு நிலை விரிவுரையாளர் அ. குமாரவேல், ஓய்வுநிலை ஆசிரியர் ஆலோசகர் திருமதி சிவனொளிபாதம், யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைமன்ற உதவிப் பணிப்பாளர் திருமதி வினோதினி ஆகியோர் வழங்குவர்.

பண்டத்தரிப்பு வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம், வில்லுப் பாட்டு ஆகிய கலை நிகழ்வுகள் நடைபெறும், பிரதான நிகழ்வாக தொண்டைமானாற்றை சேர்ந்த 70 முதியவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ-02)

## வலி.மேற்கு பிரதேச சபை; வீதிகளுக்கு மின்விளக்குகள்!

யாழ்ப்பாணம், ஒக். 05

வலி. மேற்கு பிரதேச சபையினரால் வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

புதிதாக வீதி விளக்குகள் பொருத்துதல், பழுதடைந்த வீதி விளக்குகளை திருத்தல் போன்ற பணிகள் சங்கானை நகரப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

மேற்பார்வையாளர் ரஜீவனின் மேற்பார்வையின் கீழ் குறித்த பணிகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ- 05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
03.10.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சிவில் சமூகங்களின் அரசியல் பங்களிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியில் சிவில் சமூக அமைப்புகள் ஈடுபட்டிருந்தன. இந்த முயற்சியில் ஏராளமானவர்கள் தன்னிச்சையாகவும் ஈடுபட்டனர். இதன்விளைவாக பொது வேட்பாளர் நிலைப்பாடு ஓரளவு வெற்றியையும் பெற்றது. ஆரம்பத்தில் இந்த முயற்சி பெருமளவில் எடுபடாது என்னும் நிலையில் நோக்கப்பட்டாலும்கூட - பின்னர் குறிப்பிடத்தக்களவு கவனத்தைப் பெற்றது. இந்தப் பின்புலத்தில் சிவில் சமூக அமைப்புகளும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிப்பதற்கான வாய்ப்பு உருவாகியது. ஏழு கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாக வடிவம் பெற்றது. ஆனால், தற்போது அது தொடருமா அல்லது உடையுமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது.

சிவில் சமூகம் தொடர்பில் தமிழ்ச் சூழலில் குழப்பகரமான கருத்துகள் உண்டு. சிவில் சமூகம் என்னும் சொற்பதத்தை பலரும் பலவிதங்களில் பயன்படுத்துகின்றனர். அரசுசாரா நிறுவனங்களும் சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்துகின்றன. அரசுசாரா நிறுவனங்கள் நிதிசார் முகவரமைப்புகளில் தங்கியிருப்பவை. அவை அரசியலில் ஈடுபடுவதற்கான வரையறைகள் உள்ளன. அந்த வரையறைகளை தாண்டினால் அவற்றுக்கான நிதி மூலங்கள் தடைப்பட்டுவிடும். தமிழ் மக்கள் பொதுச் சபையில் அவ்வாறான அமைப்புகளும் உண்டு. அவை தமிழ்த் தேசியக் பொதுக் கட்டமைப்பு ஒரு சிவில் சமூக - அரசியல் கூட்டாகத் தொடர்வதைத் தடுக்க முயற்சிக்கின்றன - குழப்பவும் முயற்சிக்கின்றன. இந்தப் பின்புலத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் எதிர்காலம் கேள்விக்கு உள்ளாகியிருக்கின்றது. தேர்தல் நெருங்கிவரும் நிலையில் இவ்வாறான தடுமாற்றங்கள் - குழப்பங்கள் வாக்குகள் பிரியவும் தமிழ்த் தேசியக் கட்சிகளை பிரிக்கவுமே பயன்படும். இவ்வாறான தவறை தமிழ் மக்கள் பொதுச் சபை செய்யக்கூடாது.

தமிழ் மக்கள் பொதுச் சபை அவசரத்தில் உருவாகிய ஓர் அமைப்பு. நீண்ட அரசியல் உரையாடல்களின் வழியாக உருவாகிய அமைப்பு அல்ல. தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நோக்கி வாக்குகளை திரட்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு. தேவை கருதி பலர் அதற்குள் உள்வாங்கப்பட்டனர். இவ்வாறு உள்வாங்கப்பட்டவர்கள் சிலர் தற்போது தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பை பலவீனப்படுத்துவதற்கான விஷச்செடிகளாகவும் மாறியிருக்கின்றனர். இதற்கு ஏனையவர்களும் பலியானால் தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் பெயரில் தமிழ்த் தேசிய அரசியல் மேலும் சிதைக்கப்படும் ஆபத்தே நேரிடும். தேசத்தைத் திரட்டுவதற்காக நிறுத்தப்பட்ட பொது வேட்பாளர் என்னும் நிலைப்பாடு இறுதியில் ஒன்றுபட்ட கட்சிகளைக்கூட, ஒன்றுபடுத்தி வைத்திருக்க முடியாத கையறுநிலைக்குள் சென்றிருக்கின்றது.

சிறிய விவகாரம் அரசியல் உரையாடல்களில் எட்டிப் பார்க்கின்றது. சங்கு சின்னத்தை கட்சியொன்று பயன்படுத்துவதைத் தடுக்க முடியாது. அடிப்படையில் அது ஒரு சுயேச்சை சின்னமாகவே பயன்படுத்தப்பட்டது. அதனை கட்சியொன்று சட்டரீதியில் பெற்றிருக்கின்றது. இன்னொருவர் விண்ணப்பித்திருந்தால் குலுக்கல் முறையில்தான் அது தெரிவு செய்யப்பட்டிருக்கும். “சங்கு“ சின்னம் முன்னர் ஹெல உறுமயவின் சின்னமாகவே இருந்தது. இப்போது அது ஒரு பிரச்னையில்லை. தமிழ் மக்கள் பொதுச் சபையானது பாராளுமன்றத் தேர்தலில் ஒரு பொதுக் கட்டமைப்பாக எவ்வாறு செயல்படப் போகின்றது? இந்தக் கேள்விக்கான பதில் இல்லாது விட்டால் பொதுச் சபை ஒரு தோல்வியடைந்த செயல்பாடாகவே பதிவாகும்.

# யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கை மாணவர்களின் சஞ்சிகை வெளியீடு!

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறையின் ‘கனலி’ மாணவர் சஞ் சிகை ஐந்தாவது இதழ் வெளியீட்டு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற் றது.

ஊடகக் கற்கைகள் துறை யின் தலைவர் பூங்குழலி சிறீ சங்கீர்த்தனன் தலைமையில் பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் ஆகியோர் கலந்துகொண்ட னர்.

கலைப்பீட பீடாதிபதி சி. ரகுராம் முதல் பிரதியை வெளியிட துணைவேந்தர் சி. சிறீசற்குணராஜா அதனைப் பெற்றுக்கொண்டார்.




யாழ்ப்பாண பல்கலைக் கழக பொன்விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக நடந்த இந்த நிகழ்வில் ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர் அனுதர்ஷி கபிலன், தமிழ்த்துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமார், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# யாழில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்த கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மழை காலம் நெருங்குவதால் டெங்கு நோயை கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப் பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரண, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை செயலாளர்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள்,மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-05)

# அரியாலை காந்தி ச.ச. நிலையத்தில் காந்தி ஜெயந்தி!

யாழ்ப்பாணம், ஒக். 05

இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியின் 155 ஆவது ஜெயந்தி தினம் அரியாலை காந்தி சனசமூக நிலையத்தில் கொண்டாடப் பட்டது.

கடந்த புதன்கிழமை நடந்த இந்த நிகழ்வில் சன சமூக நிலையத்தில் அமைந்துள்ள காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்த நிகழ்வில், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, காந்தியம் பத்திரிகை ஆசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி, அகில இலங்கை காந்திசேவா சங்க தலைவரும் வவுனியா பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்க ளால் லாபம் பெருகும். சக ஊழியர்களுக்கு உதவு வீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோ கத்தில் உயரதிகாரிகள் உங்களை கலந்தாலோ சித்து சில முடிவுகள் எடுப்பார்கள். தொட்டது துலங்கும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தை விரிவு படுத்துவீர்கள். உயர் அதிகாரி உங்களை மதித்துப் பேசுவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவு வார்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபா ரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோ கத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**சிம்மம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். உத்தியோ கத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். தைரியம் கூடும்நாள்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பணப்புழக் கம் கணிசமாக உயரும். எதிர்பாராத இடத்திலி ருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். நிம்மதியான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கொஞ்சம் பொறு மையை இழப்பீர்கள். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். தானுண்டு தன் வேலை யுண்டு என்றிருப்பது நல்லது. அலைச்சல் அதிகரிக்கும்.

**விருச்சிகம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூ லிக்கப்பாருங்கள். பணிகளை போராடி முடிப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். இனிமையான நாள்.

**மகரம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடு வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும். மதிப்புக் கூடும் நாள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிக ரிக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண் டாகும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். கணுக்கால் வலிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் போராட வேண்டி வரும். வேலைச்சுமை நாள்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன் அகவை நாள் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஒக். 05

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திக் ஐம்பதாவது ஆண்டு நிறைவு நாள் நாளை ஞாயிற்றுக்கிழமை சர்வமத நிகழ்வு டன் கொண்டாடப்படவுள்ளது. பொன் அகவை நிறைவு நாளான அன்று பல்கலைக்கழகத்தில் உள்ள இந்து மாமன் றம், பௌத்த சகோதரத்துவ சமூகம், கத்தோலிக்க மாண வர் மன்றம் மற்றும் முஸ்லீம் மஜ்லிஸ் ஆகியவற்றின் ஏற் பாட்டில் பல்வேறு மதப் பிரார்த்தனைகள் இடம்பெற்று, கைலாசபதி கலையரங்கத்தில் கூட்டு மத நிகழ்வு இடம் பெறவிருக்கிறது.**

அன்றைய தினம் காலை 06 மணிக்கு இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத் தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பர மேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிடேகமும், விசேட பூஜை, சிறப்பு வழிபாடுகளும், பௌத்த சகோதரத்துவ சமூகத்தின் ஏற் பாட்டில் யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச மத்திய நிலையத்தில் பௌத்த மதப் பிரார்த்தனைகளும், காலை 06 மணிக்கு கத்தோலிக்க மாணவர் மன்ற ஏற்பாட்டில் யாழ். பல்க லைக்கழக நல்லாயன் நிலையத் தில் விசேட ஆராதனைகளும், பல்கலைக்கழகத்தினுள் அமைந் துள்ள இஸ்லாமியத் தொழுகை நிலையத்தில் இஸ்லாமிய மதப் பிரார்த்தனைகளும் இடம்பெ றவுள்ளன. தொடர்ந்து பல்க லைக்கழகத்தின் பிரதான வாயி லில் அமைக்கப்பட்டுள்ள அலங் கார நுழைவாயில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்ப டவுள்ளது.

தொடர்ந்து பலகலைக்கழக நலச்சேவைகள் கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சர்வ மத நிகழ்வுகள் கைலாசபதி கலை யரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்க ழகம், இலங்கைப் பல்கலைக்க ழகத்தின் யாழ்ப்பாண வளாக மாக 1974 ஒக்ரோபர் 06ஆம் திகதி இலங்கையின் அப்போ தைய பிரதமர் சிறிமாவோ பண் டாரநாயக்காவினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப் பட்டது. அதன் பொன் விழா நிகழ்வுகள் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இடம்பெற்று வருகின்றன. பொன்விழாவை யொட்டி பல்கலைக்கழகத்தி னால் ஆண்வு மாநாடுகள், கருத் தரங்குகள், கண்காட்சிகள் என் பன ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. அதன் ஒரு அங்கமாக ஐந்தாவது அனைத்துலகத் தமி ழியல் மாநாடும், முத்தமிழ் விழாவும் எதிர்வரும் 07 ஆம், 08 ஆம் திகதிகளில் இடம்பெ றவுள்ளமை குறிப்பிடத் தக்கதா கும். (அ)

# தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழு

யாழ்ப்பாணம், ஒக். 05

தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வுக்காக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை ஒன் றிணைய வேண்டுகிறோம் என் றும் சமஷ்டியே தீர்வு என்றும் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப் புக் குழு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பா ணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் குறித்த குழுவின் திருகோண மலை மாவட்ட இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தெரி வித்தவை வருமாறு,

"இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான உரி மைகளுடன் கூடிய அரசியல் தீர்வு கோரி வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு 2022 ஆம் ஆண்டு கார்த்திகை 8 ஆம் திகதி சமஷ்டி தீர்வுக்கான மக் கள் பிரகடனத்தை வெளியிட் டிருந்தது.

இன்று வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களான நாம் எதிர்கொண்டு வரும் அரச இன வாத அடக்குமுறையில் இருந்து




மீண்டு கௌரவமான, உரிமை களை அனுபவிக்கும் பிரஜைக ளாக வாழ வேண்டுமாயின் நிலை யான அரசியல் தீர்வு அவசியம்.

ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையி லான தீர்வு ஒன்றையே நாம் திடமாக வலியுறுத்தி நிற்கின் றோம்.

இலங்கையில் நாம் சிறு பான்மையினர் அல்லர். வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் எமக் கான சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இறைமையுள்ள மக்கள் சமூகத்தினராவோம். எமது சுயநிர்ணய உரிமை, இறைமை என்பதை சமஷ்டி முறைமையின் மூலம் உறுதி செய்து கொள்ள திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

எனவே, தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் கூட்டாக இணையாத சந்தர்ப்பத்தில் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு பாராளுமன்றப் பிரதிநிதித்து வங்கள் குறைவடைவதுடன், குறிப்பாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் பாராளுமன்றப் பிரதிநி தித்துவங்கள் இழக்க வேண்டி நேரிடும் என்பதையும் ஞாபகப் படுத்த விரும்புகின்றோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# யாழ்.பண்ணை பகுதியில் நேற்று சிரமதானப் பணி!

## வடக்கு மாகாண ஆளுநர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாணம், பண்ணை சுற்றுவட்டப் பகுதிகளில் சுகா தார தரப்பினர், பொலிஸ், இரா ணுவத்தினரின் பங்களிப்புடன் நேற்று காலை சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பிளாஸ்ரிக் பொருட்கள் சேகரிக்கப்பட்ட துடன் விழிப்புணர்வு பதாகை கள் மற்றும் பிளாஸ்ரிக் சேகரிக் கும் கூடைகளும் அங்காங்கே வைக்கப்பட்டன.

இதன் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்.மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன், வடக்கு மாகாண பிரதம செய லாளர் இளங்கோவன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.அருள்ராஜ், வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் சமன் பத்திரண, யாழ்ப்பாண பிரதேச செயலா ளர் எஸ்.சுதர்சன், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், இராணுவ பொலிஸ் உயர் அதி காரிகள், கடற்படையினர், சுகா தார உத்தியோகத்தர்கள், யாழ் மாநகர சபை ஊழியர்கள் கலந் துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு மீண்டும் கொரிய வங்கி உதவி!

## ஜனாதிபதியின் செயலாளருடனான சந்திப்பில் இணக்கம் எட்டப்பட்டது



கொழும்பு, ஒக். 05

**கொரிய எக்ஸிம் வங்கியால் இடைநிறுத்தப்பட்ட, இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியுதவியை மீண்டும் வழங்க கொரிய எக்ஸிம் வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.**

கொரியா எக்ஸிம் வங்கியின் அதிகாரிகள் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்தபோதே இந்த உடன்பாட்டை வெளியிட்டனர்.

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில், இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கொரிய எக்ஸிம் வங்கி வழங்கிய நிதியுதவி 2022-2024 ஆம் ஆண்டுகளில் இடைநிறுத்தப்பட்டது. அந்த அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் செயல்படுத்துவதற்கு சலுகைக் கடன் உதவி வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக கொரிய எக்ஸிம் வங்கியின் பிரதிநிதிகள் ஜனாதிபதியின் செயலாளரிடம் தெரிவித்தனர்.

இதேவேளை எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார ரீதியில் பயனுள்ள வேலைத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் கொரிய எக்ஸிம் வங்கி பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கொரிய எக்ஸிம் வங்கியின் பணிப்பாளர் வொன்சுக் ஹா, பிரதிப் பணிப்பாளர் ஹனுய் ஹன், திட்ட முகாமையாளர் நளின் ஜயதுங்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரொஷான் கமகே ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)



# ஐ.நாவின் இணைப்பாளர் ஜனாதிபதியுடன் பேச்சு!

கொழும்பு, ஒக். 05

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் மார்க் அண்ட்ரூ பிரான்ஸ் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டரெஸின் வாழ்த்துச் செய்தியை ஐக்கிய நாடுகள் அமைப்பின் இணைப்பாளர் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் வழங்கினார்.

சமூகத்தில் தேசிய சமாதானத்துக்கான புதிய அரசாங்கத்தின் பூர்வாங்க முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த இணைப்பாளர், ஒவ்வொரு தரப்பினருக்கு மத்தியிலும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டு தெரிவித்தார். ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் அவர் வரவேற்றார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் வேலைத் திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்கு ஐ.நா பூரண ஒத்துழைப்பு வழங்குமெனவும் உறுதியளித்துள்ளார். அதே போல் நாட்டுக்கு நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)



# ஐ.நா அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதி ஜனாதிபதியின் செயலருடன் சந்திப்பு

கொழும்பு, ஒக். 05

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோடா மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கைக்குள் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது மற்றும் இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு இடையிலான ஒத்துழைப்பு வேலைத்திட்டம் குறித்து இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# எதிர்வரும் தேர்தலில் போட்டியிட இளைஞர், யுவதிகளுக்கு வாய்ப்பு

## ரஞ்சித் பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 05

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்காக இளைஞர், யுவதிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட கட்சி என்ற வகையில் நாம் இளைஞர், யுவதிகளுக்கு வாய்ப்பு வழங்கியுள்ளோம். மக்கள் எமக்கு ஆதரவளிப்பார்கள் என நாம் நம்புகிறோம்.

நாம் பொருத்தமானவர்களை தெரிவுசெய்துள்ளோம். இது இளைஞர்களுக்கான காலம் என எமது கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார். நாட்டில் நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதி தேர்தல் குறித்து நாம் விரிவாக ஆராய்ந்தோம்.

அது தொடர்பில் புள்ளிவிவரங்களைப் பெற்று பல தீர்மானங்களை மேற்கொண்டோம்.

வெற்றியை எவ்வாறு ஏற்றுக் கொள்கிறோமோ அதேபோல் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# கூரையிலிருந்து விழுந்து இளைஞர் உயிரிழப்பு !

கொழும்பு, ஒக். 05

கூரையிலிருந்து கீழே விழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளதாக மடூல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

34 வயதுடைய தவலம்பெலச வெவேபெத்த மடூல்சீமை பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மெட்டிக்காத்தன்ன விவசாய சேவைகள் காரியாலய கட்டடத்தில் கூரையை புனரமைக்கும் போது தவறுதலாக கூரையில் இருந்து கீழே விழுந்து குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் மெட்டிக்காத்தன்ன பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மடூல் சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை மடூல்சீமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 25,000 ரூபாய் உர மானியம் வழங்குவதில் சிக்கலில்லை!

## விவசாய அமைச்சின் செயலர்

கொழும்பு, ஒக். 05

நெல் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு 25,000 ரூபாய் உர மானியம் வழங்குவதில் சிக்கல் இல்லை என விவசாய அமைச்சின் செயலாளர் எம். பி. என். எம்.விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் விவசாய அமைச்சில் ,ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் உயர் அதிகாரிகளுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உரங்களை கொள்வனவு செய்யும் போது ஞசு குறியீட்டு முறையை தயார் செய்யுமாறு விவசாயிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் எனவும் எம்.பி.என்.எம்.விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெரும்போகத்தில் பயிரிடப்படும் 8 லட்சம் ஹெக்ரேயர்களுக்கு உரம் வழங்க அரசுக்கு 20 பில்லியன் ரூபாய் செலவாகிறது. விவசாயிகளின் தனிப்பட்ட கணக்கில் நேரடியாக பணம் வரவு அவர் குறிப்பிட்டார். (அ)

# கை, கால், வாய் தொற்று நோய்கள் சிறுவர்களிடையே பரவும் அபாயம்

கொழும்பு, ஒக். 05

சிறுவர்களிடையே கை, கால், வாய் தொற்று நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக, சிறுவர்கள் நல வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

சிறுவர்களிடையே தற்போது காய்ச்சல் பரவுவது அதிகரித்துள்ளமையால் முகக்கவசம் அணிய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.



கை, கால், வாய் நோய் தொற்றினால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், எனவே, சிறுவர்களை பாதுகாக்க சரியான சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சியை பாதுகாக்கவேண்டும்

## அநுரவிடம் விமல் கோரிக்கை

கொழும்பு, ஒக். 05

**சர்வதேச சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றாது, ஒற்றையாட்சியை பாதுகாத்தப்படி தேசிய மக்கள் சக்தி பயணிக்க வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான முன்னாள் எம்.பி. விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கட்சியொன்று ஆட்சிபீடமேறிய பின்னர் ஆரம்பகாலம் என்பது இன்பமாகவே இருக்கும். கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும் ஆரம்ப காலம் என்பது சுவையானதாக இருந்தது. நாட்கள் செல்ல செல்லத்தான் உண்மையான முகம் எது என்பதை அறிந்துகொள்ள முடியும்.

நாட்டுக்கும், மக்களுக்கும் தவறிழைக்காது, பிரிவினைவாதத்துக்கு கப்பம் வழங்காது, வெளிநாட்டு சக்திகளின் தேவைக் கேற்ப செயற்படாது, நாட்டின் இறையாண்மை மற்றும் ஒற்றையாட்சியை பாதுகாத்து பயணித்தால் எவ்வித பிரச்னையும் இருக்காது. இதற்கு நாட்டு மக்களும் ஆணை வழங்குவார்கள்.

அதேவேளை பொதுத்தேர்தலில் சர்வஜன பலவேகய கட்சியின் சார்பிலேயே நாம் போட்டியிடுவோம்.



எதிரணிகளுக்கிடையில் கொள்கை ரீதியிலான முரண்பாடுகள் உள்ளன. எனவே, எதிரணி கூட்டணி என்பது சாத்தியப்படமாட்டாது.-என்றார். (அ)

# மோசடிக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புள்ளோருக்கு இடமில்லை

## திஸ்ஸ அத்தநாயக்க திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 05

ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையோரை தமது கூட்டணியில் இணைத்துக் கொள்ளப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசிய கட்சியுடனான பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டுள்ளது. அக்கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் நீடிக்கிறார். அதனை எமது கட்சியினர் விரும்பவில்லை.

அதுமாத்திரமல்லாது ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையோரும் அந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளார்கள். அவ்வாறானவர்களை இணைத்துக்கொண்டு அரசியல் பயணத்தை தொடர முடியாது.

எதிர்வரும் 10ஆம் 11 ஆம் திகதிகளில் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை நாம் அனைத்து மாவட்டங்களிலும் தாக்கல் செய்யவுள்ளோம்.

நான் இம்முறை கண்டியில் முதன்மை வேட்பாளராக போட்டியிடுகிறேன். அந்த மாவட்டத்தில் என்னோடு சிறந்த குழுவொன்று போட்டியிடுகிறது. அங்கு நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம்.-என்றார். (அ)

# பொலிஸ் பொதுமக்கள் நிவாரண பிரிவு மீண்டும்

கொழும்பு, ஒக். 05

கடந்த காலங்களில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் பொதுமக்கள் நிவாரணப் பிரிவை மீள ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி, அரச விடுமுறை தினத்தைத் தவிர ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பொதுமக்கள் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கம் 140 சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை கொழும்பு - 2 என்ற முகவரியில் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகத்தில் பொதுமக்கள் நிவாரணப் பிரிவு இயங்கவுள்ளது.

தங்களது முறைப்பாடுகளுக்கு அமையக் பொலிஸ் நிலையங்கள் மற்றும் விசாரணைப் பிரிவுகளில் எதிர்பார்த்த தீர்வு கிடைக்காதவர்கள் பொலிஸ் பொதுமக்கள் நிவாரணப் பிரிவு ஊடாக பொலிஸ்மா அதிபர் மற்றும் உயர் அதிகாரிகளிடம் முறையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குழந்தைகளுக்கு விசேட பிறப்பு சான்றிதழ் வேலைத்திட்டம் அமுல்

கொழும்பு, ஒக். 05

பிறப்புச் சான்றிதழ் இல்லாத குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ் வழங்கும் வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத குழந்தைகளை இனங்கண்டு அவர்களுக்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் சான்றிதழ்களை வழங்குவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் கணிசமான எண்ணிக்கையிலான குழந்தைகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களினால் இந்த மாதம் முழுவதும் இச்செயற்பாடு மேற்கொள்ளப்படும்.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ்களுக்கு ஒக்டோபர் மாதம் முழுவதும் கட்டணம் அறவிடப்பட மாட்டாது என அரசாங்க தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ரணில் விக்கிரமசிங்க ஒருபோதுமே விடுபாட்டுரிமையை கோரவில்லை

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம்

கொழும்பு, ஒக். 05

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் விடுபாட்டுரிமையை கோரவில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் தனுஸ்க ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி விடுபாட்டுரிமையை கோரவேண்டிய அவசியமில்லை. அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பது போல முன்னாள் ஜனாதிபதி ஒருபோதும் விடுபாட்டுரிமையை கோரவில்லை என அவர் கூறினார்.

நாட்டில் நீதித்துறையின் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. எந்த சம்பவம் தொடர்பிலும் நீதி வழங்குவதற்கு எந்த தடையும் இல்லை என அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவ்வேளை விடுபாட்டுரிமை காணப்பட்டதால் மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த விசாரணை உரிய முறையில் இடம்பெறவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளதை அவர் நிராகரித்தார்.

வெளிவிவகார அமைச்சரின் கருத்துக்கள் தவறானவை. பொது மக்கள் தவறாக வழிநடத்தப்படுவதை தவிர்ப்பதற்காக அது குறித்த தெளிவுபடுத்தல்கள் அவசியம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# அதிகாரம் பிளவுபடின் நாட்டின் இயல்பு நிலை பாதிக்கப்படும்!

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 05

பிரதமர் பதவி திசைகாட்டி சின்னத்துக்கு கிடைக்கப்பெறுவதே பொருத்தமாக இருக்கும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாச பிரதம வேட்பாளராக போட்டியிடவிருக்கின்றார். ஆனாலும் கூட பிரதமர் பதவி திசைகாட்டிக்கே கிடைக்க வேண்டும். ஜனாதிபதியாக அநுரவும் பிரதமராக சஜித்தும் ஆனால் ஜனாதிபதி பிரதமருக்கிடையில் சிக்கல் ஏற்படும்.

அத்தகைய சம்பவங்களை நாம் முன்னராகவே எம்முடைய நாட்டில் பார்த்திருக்கின்றோம். சந்திரிகா-ரணில், மைத்திரிபால சிறிசேன-ரணில் இறுதியாக கோட்டா-பசில் என மூன்று பிரச்னைகளை நாம் பார்த்திருக்கின்றோம். ஜனாதிபதியின் அதிகாரமும் பாராளுமன்ற அதிகாரமும் இரு வேறுபட்டவர்களின் கரங்களுக்கு சென்றால் நாட்டின் இயல்வு நிலை பாதிக்கப்படும்-என்றார். (அ)

# சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் சிலர் தேசிய மக்கள் சக்தியில் சேர விருப்பம்!

கொழும்பு, ஒக். 05

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் தேசிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

சுதந்திரக்கட்சியின் கெஸ்பாவ தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி கீர்த்தி உடவத்தை இதனை தெரிவித்தார்.

முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருக்கு ஆதரவளித்த இந்த குழுவினர் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளனர் என அவர் கூறினார்.

எங்களின் முன்னயை தீர்மானம் தவறானது என்பதை நாங்கள் தற்போது உணர்கின்றோம். நாங்கள் தற்போது தேசிய மக்கள் சக்தியின் உதவியை கோருகின்றோம். உள்ளூராட்சி அளவில் எங்களுக்கு தலைமைத்துவம் உள்ளது. தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளை எங்களால் நடைமுறைப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தமானோர் பாராளுமன்று செல்லாவிட்டால் பெரும் ஆபத்து!

## சரித ஹேரத் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 05

**பாராளுமன்றத்துக்கு பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாவிட்டால் பாரிய ஆபத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு பாரிய சவால்கள் காத்திருக்கின்றன. பொருளாதார, அரசியல் மறுசீரமைப்பு மற்றும் பூகோள ரீதியான இருப்பை தக்கவைத்துக் கொள்ளல் ஆகியனவே அவையாகும்.

அவற்றை சரியான முறையில் பேணுவது அவசியமாகும். தேர்தல் காலங்களில் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கினாலும் இவ்வாறான விடயங்களை செயற்படுத்துவதற்கு நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் அவசியம்.

நாட்டை வழிநடத்தக்கூடிய சிறந்த குழு தம்மிடமே இருப்பதாக ஒருசிலர் கூறிவருகிறார்கள். மறுபுறம் 225 பேரும் அவசியமில்லை என மற்றுமொரு சாரார் கூறுகிறார்கள்.

ஆயினும் நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லக்கூடிய பொருத்தமான நபர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட வேண்டும்-என்றார்.

# வரக்காபொலவில் உள்நாட்டு துப்பாக்கியுடன் தம்பதி கைது

கொழும்பு, ஒக். 05

வரக்காபொல அல்கம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் தம்பதி கைது செய்யப்பட்டுள்ளதாக வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

அல்கம பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதுடைய மனைவியும் 40 வயதுடைய கணவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

வரக்காபொல அல்கம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சட்டவிரோத மதுபானம் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக வரக்காபொல பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த வீட்டுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டு துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர்களான தம்பதி வரக்காபொல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# பல நிறுவனங்களுக்கு சொந்தமான பொருட்களால் நிரம்பியுள்ள அமைச்சர்களின் அரச பங்களாக்கள்!

கொழும்பு, ஒக். 05

முன்னாள் அமைச்சர்கள் பலருக்கு கொழும்பில் வழங்கப்பட்டிருந்த ஆடம்பர பங்களாக்கள் பல நிறுவனங்களுக்கு சொந்தமான பொருட்களால் நிரம்பியுள்ளதைக் கண்டுபிடித்துள்ளதாக அரச நிர்வாக உள்துறை நீதித்துறை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்களின் வட்டாரங்கள் தெரிவிப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த பங்காளக்களில் காணப்படக்கூடிய பொருட்களை உரிய நிறுவனங்களிடம் ஒப்படைத்து முடிக்கும் வரையில், அவற்றை அரசாங்கம் மீளவும் பொறுப்பேற்கத் தாமதமாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பங்களாக்களில் உள்ள குறித்த பொருட்களை விரைவில் ஏற்றுக் கொள்ளுமாறு அமைச்சு, குறித்த நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் பலருக்கு பல தனியார் நிறுவனங்கள் சொந்தமாக உள்ளமையினால் அந்த நிறுவனங்களில் இருக்கும் கதிரை, மேசை, தொலைக்காட்சி உள்ளிட்ட பொருட்களை அரச பங்களாக்களில் பயன்படுத்தியிருக்கின்றனர்.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரச பங்களாக்களில் நேற்று வரையில் 10 பங்காளாக்கள் மாத்திரமே மீள ஒப்படைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கழுத்து அறுக்கப்பட்டு தம்பதி படுகொலை!

கொழும்பு, ஒக். 05

அஹுங்கம - வல்ஹெங்கொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கணவன், மனைவி கொலை செய்யப்பட்டுள்ளதாக அஹுங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

அல்கேவத்தையைச் சேர்ந்த 63 வயதுடைய கமனி வீரதுங்க, 67 வயதுடைய பி.ஜயசிங்க ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த தம்பதியின் மகள் கொழும்புக்கு சென்ற நிலையில், இன்று காலை வீட்டிலிருந்த தந்தையின் தொலைபேசிக்கு மகள் அழைப்பு விடுத்துள்ளார்.

தந்தையிடமிருந்து பதில் இல்லாத காரணத்தினால் உறவினர்களிடம் தந்தையை சென்று பார்க்குமாறு கூறியுள்ளார்.

அதன்படி உறவினர் சென்று பார்த்தபோது, வீட்டில் இரத்தக்கறை இருந்ததை பார்த்து பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளனர்.

பொலிஸார் சம்பவ இடத்தை சோதனை செய்தபோது, வீட்டுக்குள் தம்பதியர் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது.

கொலைக்கான காரணமோ, சந்தேகநபர்கள் தொடர்பிலோ இதுவரை தகவல் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அஹுங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# முன்னாள் அமைச்சரின் சகோதரர் கைதானார்!

கொழும்பு, ஒக். 05

கட்டான பிரதேசத்தில் ஆடைத்தொழிற்சாலையை நடத்தி வந்த ஓமான் வர்த்தகர் மீது தாக்குதல் நடத்தி சொத்துக்களை நாசம் செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்தவின் இளைய சகோதரர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு, கட்டானவில் ஆடைத் தொழிற்சாலை நடத்தி வந்த தொழிலதிபரான ஓமானியர் வசிக்கும் வீட்டுக்குள் புகுந்து, அவரை கொடூரமாகத் தாக்கி, சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இந்த தொழிலதிபருக்கு சொந்தமான ஆடைத்தொழிற்சாலையின் போக்குவரத்துக்கு லொறிகளை பயன்படுத்தியமை தொடர்பான தகராறே தாக்குதலுக்கு காரணம்.

இந்தச் சம்பவத்தில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தலையிட்டதால், ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் வர்த்தகர் மற்றும் ஆடைத் தொழிற்சாலைக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த தாக்குதல் தொடர்பில் கந்தானை பொலிஸார் முன்னர் நான்கு சந்தேக நபர்களை கைது செய்திருந்தனர்.

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அங்கு மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான முன்னாள் இராஜாங்க அமைச்சரின் சகோதரர் கிட்டத்தட்ட ஒரு வருடத்தின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# யானை தாக்கி பெண் பலி!

கொழும்பு, ஒக். 05

அம்பாந்தோட்டை மத்தள, அலுத்கம்ஆர, அனுக்கங்கல பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மத்தல பொலிஸார் தெரிவித்தனர்.

தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய பெண் ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித் துக் கொண்டிருக்கும்போது வீதியில் நின்ற காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திலிருந்த கணவன் உயிரைப் பாதுகாப்பதற் காக தப்பிச் சென்றதாக மத்தள பொலிஸார் தெரிவித்தனர்.


## பசுமை அமைதி விருதுகள்
### சூழல் பொது அறிவுப் பரீட்சை 2024

மாணவர்களிடையே
சூழல் விழிப்புணர்வு,
சூழற் கல்வி,
சூழற் பாதுகாப்புச் செயற்பாடுகளை
ஊக்குவிக்கும் முகமாகத்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால்
2024 ஆம் ஆண்டுக்கான
பசுமை அமைதி விருதுகளை வழங்கும் பொருட்டுச்
சூழல் பொது அறிவுப் பரீட்சை
இணையவழியில் நடாத்தப்படவுள்ளது.



1 ஆம் 2 ஆம் 3 ஆம்
இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே
சூழலியல் ஆசான் க.சி. குகதாசன்
ஞாபகார்த்த தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள்
வழங்கி மதிப்பளிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு 20.10.2024
பரீட்சைத் திகதி 27.10.2024

மேலதிக தகவல்களைப் பெறவும் பதிவுகளை மேற்கொள்ளவும்
www.tamilnationalgreen.org
இணையத் தளத்தினூடாக அணுகவும்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 தமிழ்க் கட்சிகள் ஓரணியில் அம்பாறையில் வெற்றி உறுதி



காரைதீவு, ஒக். 05

**தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் ஆறு பிரதான கட்சிகள் ஓரணியில் இணைய முன்வந்துள்ளதால் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் ஆசனத்தை உறுதிப்படுத்தும் கலந்துரையாடல் வெற்றியளித்துள்ளது.**

அம்பாறை மாவட்ட சிவில் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிப் பிரதிநிதிகளுடன் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

காரைதீவு பொது நூலக கட்டடத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் பங்குபற்றினர்.

இதில், பங்குபற்றிய கட்சிகளின் பிரதிநிதிகள், அம்பாறை மாவட்ட நிலைமையில் ஓரணியில் இணைந்து போட்டியிட வேண்டும் எனும் கோரிக்கைக்கு தமது சம்மதத்தை தெரிவித்ததுடன், இந்தக் கூட்டம் தொடர்பில் தமது கட்சித் தலைமைகளுக்குத் தெரியப்படுத்துவதாக கூறினர்.

கொள்கையளவில் இணங்கிய தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் பொதுத் தேர்தல் தொடர்பான இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்ட பொதுக் கட்டமைப்பின் மத்திய குழு உறுப்பினரும், தமிழ் மக்கள் பொதுச் சபையின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான இ. விக்னேஸ்வரன் மற்றும் அம்பாறை மாவட்ட சிவில் அமைப்பின் தலைவர் கண. வரதராஜன் ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

“ இந்தக் கலந்துரையாடல் முதல்கட்ட வெற்றியாகும். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் நிலைமையை கருத்தில் கொண்டு தமிழ் ஆசனத்தை காப்பாற்றும் வகையில் தமிழ்க் கட்சிகளை ஓரணியில் போட்டியிட வைக்கும் முயற்சிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடனும் பேசி வருகின்றோம். அம்பாறை மாவட்ட கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள ஆறு கட்சிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர். முதல்கட்ட முயற்சி வெற்றியளித்துள்ளது. அடுத்து சின்னம், ஆசன பங்கீடு தொடர்பில் விரைந்து ஒரு கலந்துரையாடல் மூலம் ஓர் இணக்கப்பாட்டை எடுக்கும் முயற்சியில் எமது சிவில் சமூக கட்டமைப்பும், தமிழ் மக்கள் பொதுச்சபையும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பதால் மாவட்டத்தில் ஆசனம் இழக்கப்படும். தமிழ்க் கட்சிகள் இணைந்து போட்டியிட வேண்டும் எனும் கோரிக்கையின் அடிப்படையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது” என்றனர்.

இதேவேளை, கலந்துரையாடலில் பங்குபற்றிய தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தத் தேர்தல் கூட்டில் தமிழ்த் தேசிய பரப்புக்கு வெளியில் உள்ள கட்சிகளை இணைக்க வேண்டாம் என தங்கள் கருத்தை முன்வைத்திருந்தனர்.

(எ)



# பாடசாலை மாணவி கௌரவிப்பு

திருக்கோவில், ஒக். 05

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேசுவரர் வித்தியாலய மாணவி எஸ். கிசார்த்தனா ஈட்டி எறிதல் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கி தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இந்த மாணவியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் த. இந்திரன் தலைமையில் நடைபெற்றது.

(எ)

# மக்கள் பிரச்னைகள் குறித்து விசேட விழிப்புணர்வு கூட்டம்

கிண்ணியா, ஒக். 05

மக்கள் தாம் வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து அறிந்து கொள்வதற்கான விசேட விழிப்புணர்வு கூட்டம் கிண்ணியா ஈச்சந்தீவு பல்தேவைக் கட்டடத்தில் நேற்று நடைபெற்றது.

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் செயல்பட்டுவரும் சமூக செயல்பாட்டுக்குழுவுடனான கலந்துரையாடலே இவ்வாறு நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு கூட்டத்தில் இப்பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் இனம் காணப்பட்ட உரிமை சார் பிரச்னைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், தீர்வுகள் சம்பந்தமாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

(எ)


# சிறுவர் தினத்தை முன்னிட்டு மாபெரும் இரத்ததான முகாம்

களுவாஞ்சிக்குடி, ஒக். 05

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பெரண்டினா களுவாஞ்சிக்குடி கிளை மற்றும் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையும் இணைந்து உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் எனும் தொனிப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாமை நடத்தப்பட்டது.

திடீர் விபத்துக்கள், சத்திர சிகிச்சைகளுக்கான அவசர தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனை இரத்த வங்கியில் நிலவுகின்ற பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

(எ)



# கிழக்கு மாகாணத்தின் வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் இரத்து

கல்முனை, ஒக். 05

கிழக்கு மாகாணத்தின் வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்களில் பல முறைகேடுகள் இருப்பதாகக் கூறி இலங்கை ஆசிரியர் சங்கங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் ஆசிரியர் சங்கத் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ உட்பட பாதிக்கப்பட்ட 14 ஆசிரியர்களால் கல்முனையிலுள்ள மாகாண மேல் நீதிமன்றத்தில் கட்டாணை மனு கடந்த மே மாதம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்ற விடயங்களில் ஆசிரியர் இடமாற்ற சபை மற்றும் ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டு சபை ஆகியன சரியாகக் கட்டமைக்கப்படவில்லை என்றும் கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு முரணாக ஆசிரியர் இடமாற்றங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் கூறி தங்களது இடமாற்றங்களை இரத்து செய்யக் கோரியும் தங்களது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான கிழக்கு மாகாண சபை சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்ட அனைத்து மனுதாரர்களினதும் இடமாற்றங்களை இரத்துச் செய்வதாகவும் அவர்கள் இடமாற்றத்துக்கு முன்னர் எந்தப் பாடசாலைகளில் கற்பித்தார்களோ அந்தப் பாடசாலைகளில் அவர்களை மீள பணிக்கு அமர்த்துவதற்கும் எதிர்வரும் காலங்களில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை கண்டிப்பாக பின்பற்றி இடமாற்றங்கள் செய்வதாகவும் உறுதியளித்தனர்.

அதனைத் தொடர்ந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்த பாதிக்கப்பட்ட 14 ஆசிரியர்களின் இடமாற்றங்கள் இரத்து செய்யப்பட்டன.

(எ)

# கடலரிப்பை தடுக்க நடவடிக்கை

சாய்ந்தமருது, ஒக். 05

கடலரிப்பால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது கடற்கரைப் பிரதேசத்தை பாதுகாக்கும் நோக்கில் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தால் கற்பாறைகள் போடப் [illegible] டுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இருந்தும் அண்மைக்காலமாக இந்த நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் முதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடலரிப்பால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்த பௌஸி விளையாட்டு மைதானம் அமைந்துள்ள பிரதேசத்திலேயே இவ்வாறு பாறைகள் போடப்படும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லெபனான், ஏமன், சிரியாமீது இஸ்ரேல் பலமுனை தாக்குதல்



டெல் அவில், ஒக். 05

**லெபனான், காஸா, ஏமன், சிரியா மீது ஒரே நேரத்தில் இஸ்ரேல் இராணுவம் பலமுனைகளில் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் காஸா பகுதி பிரதமர் ரவுகி முஸ்தாகா, ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவின் மருமகன் ஹசன் ஜாபர் அல் - குவாசிர் உள்ளிட்ட 300 பேர் உயிரிழந்தனர்.**

பலஸ்தீனத்தின் காஸாவை ஆட்சி செய்த ஹமாஸ் போராளிகள் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் பகுதியில் நுழைந்து கொடூரத் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடியாக, காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தரைவழித் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் இராணுவம் - ஹமாஸ் போராளிகள் இடையே ஓராண்டாக போர் நீடித்து வருகிறது.

இதற்கிடையே, மத்திய கிழக்கில் உள்ள பல்வேறு நாடுகளை சேர்ந்த தீவிரவாத குழுக்களும், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக இஸ்ரேலை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, இஸ்ரேல் விமானப்படை தாக்குதல் நடத்தியது. இதில், ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து, லெபனான் எல்லைக்குள் இஸ்ரேல் இராணுவம் நுழைந்து தரைவழி தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேபோன்று, ஏமன் நாட்டின் ஹவுத்தி தீவிரவாதிகள், இஸ்ரேலை குறிவைத்து ஏவுகணை, ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கு பதிலடியாக ஏமன் நாட்டின் துறைமுகங்களை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது.

சிரியாவின் ஷியா பிரிவை சேர்ந்த பல்வேறு குழுக்களும் இஸ்ரேலை குறிவைத்து தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், லெபனான், காஸா, சிரியா, ஏமன் ஆகிய நாடுகள் மீது இஸ்ரேல் இராணுவம் தற்போது ஒரே நேரத்தில் பலமுனை தாக்குதல் நடத்தி வருகிறது.

ஹமாஸின் மூத்த தலைவர் ரவுகி முஸ்தாகா, திரைமறைவில் காஸாவின் பிரதமராக செயல்பட்டு வந்தார். இஸ்ரேல் விமானப் படை தாக்குதலில் ரவுகி முஸ்தாகா உயிரிழந்தார். இதை இஸ்ரேல் இராணுவத் தலைமை உறுதி செய்தது.

ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லாவின் மருமகன் ஹசன் ஜாபர் அல் - குவாசிர், சிரியா தலைநகர் டமாஸ்கஸில் பதுங்கியிருந்தார். அவர் தங்கியிருந்த கட்டடத்தை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசின. இதில் ஹசன் ஜாபர் அல் - குவாசிர் உயிரிழந்தார்.

இஸ்ரேல் பகுதிகளை இலக்கு வைத்து ஹிஸ்புல்லாக்கள் 25 ஏவுகணைகளை வீசினர். அவற்றை இஸ்ரேல் இராணுவம் நடுவானில் இடைமறித்து அழித்தது. "ஹிஸ்புல்லா போராளிகளின் 60 சதவீத ஆயுதங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 40 சதவீத ஆயுதங்களும் விரைவில் அழிக்கப்படும்" என்று இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் கூறினர். லெபனானில் இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் கடந்த 4 நாட்களில் மட்டும் 300 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை, ஈரானின் 6 நகரங்களில் உள்ள அணு உலைகள், எண்ணெய்க் கிணறுகளை குறிவைத்து தாக்குதல் நடத்த இஸ்ரேல் இராணுவம் திட்டமிட்டுள்ளது என்று சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. (எ)

# இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழகம்

சென்னை, ஒக். 05

தமிழகத்தில் 2021ஆம் ஆண்டுக்குப் பிறகு 46 புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டதுடன், 1.39 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளதால், இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் தலைசிறந்த மாநிலம் என மத்திய அரசின் புள்ளியியல் துறை ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்தவை வருமாறு, முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையில் தி. மு. க. ஆட்சி தொடங்கிய பிறகு, 2030ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தை ஒரு ட்ரில்லியன் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாக்க வேண்டும் என்ற இலக்குடன் தொழில் முதலீட்டாளர் மாநாடுகள் நடத்தப்பட்டு, தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பணி தொடங்கப்பட்டது.

தி. மு. க. அரசின் தொழில் வளர்ச்சி சாதனைகள் இந்திய அளவில் சிறந்து விளங்குகின்றன. இதை மத்திய அரசின் புள்ளியியல் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தி உறுதிப்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இந்தியா உட்பட 5 தூதுவர்களை திரும்ப அழைத்த பங்களாதேஷ்

டாக்கா, ஒக். 05

பங்களாதேஷ் இடைக்கால அரசு, அதன் முக்கிய தூதரக மறுசீரமைப்பு நடவடிக்கையாக இந்தியா உட்பட ஐந்து நாடுகளின் தூதுவர்களை திரும்ப அழைத்திருப்பதாக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பெல்ஜியம், அவுஸ்திரேலியா, போர்த்துக்கல், இந்தியா மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தரத் தூதுவர்கள் உடனடியாக டாக்காவுக்கு திரும்ப வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டனுக்கான தூதுவர் சைதா முனா தஸ்னீம் திரும்ப அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# கள்ளச்சாராயம் அருந்தி ஈரானில் 26 பேர் மரணம்

தெஹ்ரான், ஒக். 05

ஈரானின் வடக்கு மாகாணங்களில் உள்ள மசர்தரன் மற்றும் கிலன் ஆகிய பகுதிகளிலும் மேற்கு ஹமதான் மாகாணத்திலும் மெத்தனால் கலக்கப்பட்ட கள்ளச் சாராயத்தை அருந்திய 26 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், கள்ளச் சாராயம் அருந்திய நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக அந்த நாட்டு அரசு ஊடகமான ஐ. ஆர். என். ஏ. செய்தி வெளியிட்டுள்ளது. (எ)



## லெபனானில் 150 பயங்கரவாத உட்கட்டமைப்புகள் தகர்ப்பு

### இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு

டெல் அவில், ஒக். 05

லெபனானில் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பின் முக்கிய மையங்கள், ஆயுத சேமிப்பு பகுதிகள் மற்றும் ரொக்கெட் ஏவும் தளங்கள் ஆகியவை அழிக்கப்பட்டு விட்டன என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இந்தச் சூழலில், லெபனான் நாட்டிலுள்ள 28 கிராமங்களைச் சேர்ந்த மக்களை உடனடியாக வெளியேறும்படி இஸ்ரேல் படைகள் எச்சரித்துள்ளன. அந்த நாட்டிலுள்ள ஹிஸ்புல்லா அமைப்பை இலக்காக கொண்டு இஸ்ரேல் தாக்குதலை தொடுத்து வருகிறது. (எ)

லெபனானில் முதன் முறையாக

# இஸ்ரேல் படைகள் மீது இராணுவம் தாக்குதல்!

பெய்ரூட், ஒக். 05

இஸ்ரேல் படைகள் மீது முதன் முறையாக லெபனான் இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்தி ஓராண்டு நிறைவடைய உள்ள சூழலில், இஸ்ரேல் காஸாவை இலக்காகக் கடும் போரில் ஈடுபட்டு வருகிறது. இதில், 43 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீன மக்கள் உயிரிழந்தனர். இந்தச் சூழலில், பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு செயல்பட்டு வருகிறது.

இந்தப் போரில் இதுவரை இஸ்ரேல் படைகள் மீது ஹிஸ்புல்லா மட்டுமே தாக்குதல் நடத்தி வந்த நிலையில், முதன் முறையாக இஸ்ரேல் படைகள் மீது லெபனான் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் லெபனான் இராணுவ உயர் அதிகார் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் மீது பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# வெள்ளி கிரக ஆய்வுக்காக வீனஸ் விண்கலம் ஏவப்படும்

சென்னை, ஒக். 05

வெள்ளி கிரக ஆய்வுக்காக 2028ஆம் ஆண்டு வீனஸ் விண்கலம் ஏவப்படும் என்று இஸ்ரோ அறிவித்துள்ளது.

விண்வெளி அறிவியல் ஆய்வில் சந்திரயான், மங்கள்யான், ஆதித்யா, ஆஸ்ட்ரோசாட் உட்பட பல்வேறு முன்னெடுப்புகளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் சூரிய குடும்பத்தில் பூமிக்கு மிக அருகில் உள்ள வெள்ளி கிரகத்தை ஆய்வு செய்வதற்காக வீனஸ் விண்கலத்தை அனுப்புவதற்கு இஸ்ரோ திட்டமிட்டு வந்தது.

இந்தத் திட்டத்துக்கு இந்திய மத்திய அரசு ஒப்புதலளித்து 1, 236 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதையடுத்து பணிகளை இஸ்ரோ தொடங்கியுள்ளது. இந்த நிலையில், வீனஸ் விண்கலம் 2028 மார்ச் 29ஆம் திகதி விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ அறிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் உலகக் கிண்ணம் பாகிஸ்தான் அணி வெற்றி

## 85 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை

ஷார்ஜா, ஒக். 05

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற முதலாவது போட்டியில் 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் மகளிர் அணி வெற்றி பெற்றது.

நடப்பு மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் நேற்று முன்தினம் இரவு மோதின.

9ஆவது ஐ. சி. சி. மகளிர் உலகக் கிண்ணத் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது. இதில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் வியாழக்கிழமை விளையாடின. ஷார்ஜாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி 20 ஓவர்களில் 116 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக அந்த அணியின் தலைவி பாத்திமா சனா 30 ஓட்டங்கள் எடுத்தார்.

117 ஓட்டங்கள் என்ற இலக்கை நடப்பு ஆசிய சம்பியனான இலங்கை அணி எளிதில் எட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு அதைத் தகர்த்தது. 120 பந்துகளில் மொத்தம் 61 ஓட்டமற்ற பந்துகளை பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் வீசியிருந்தனர். அது இலங்கை அணிக்கு நெருக்கடியாக அமைந்தது.

அணித் தலைவி சமரி அத்தப்பத்து மற்றும் ஹர்ஷிதா



ஆகியோர் சோபிக்க தவறியது இலங்கையின் வீழ்ச்சிக்கு வித்திட்டது. பாகிஸ்தான் தரப்பில் சாடியா இக்பால் 3 மற்றும் பாத்திமா, உமைமா, நஸ்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். நிதா தர் மற்றும் துபா ஹசன் ஆகியோர் விக்கெட் வீழ்த்தவில்லை என்றாலும் ஓட்டங்கள் அதிகம் கொடுக்கவில்லை.

இந்த நிலையில் 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 85 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது இலங்கை. இதனால் 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

(எ)



# ஆர்ஜென்ரீன அணிக்கு திரும்பினார் மெஸ்சி

பியூனஸ் அயர்ஸ், ஒக். 05

உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர வீரரான லயோனல் மெஸ்சி ஆர்ஜென்ரீன அணிக்கு திரும்பினார்.

2026ஆம் ஆண்டு பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடருக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இதில் தென் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான தகுதி சுற்றில் ஆர்ஜென்ரீன அணி தனது அடுத்த ஆட்டங்களில் வெனிசுலாவுடன் எதிர்வரும் 10ஆம் திகதியும் பொலிவியாவுடன் 15ஆம் திகதியும் மோதவுள்ளது.

இந்த இரு ஆட்டங்களுக்கான ஆர்ஜென்ரீன அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கணுக்கால் காயம் காரணமாக சமீபகால போட்டிகளில் பங்கேற்காத நட்சத்திர வீரரான லயோனல் மெஸ்சி அணிக்கு திரும்பியுள்ளார். காயம் காரணமாக மெஸ்சி, கடந்த இரு ஆட்டங்களில் விளையாடவில்லை. இதேவேளை, தென் அமெரிக்க தகுதி சுற்றுப் போட்டியில் ஆர்ஜென்ரீனா 18 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. (எ)

# 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் மகளிர் வெற்றி



ஷார்ஜா, ஒக். 05

மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் தொடக்க ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐ. சி. சி. மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதன் தொடக்க ஆட்டத்தில் 'பி' பிரிவில் உள்ள பங்களாதேஷ் - ஸ்கொட்லாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 119 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக சோபனா மோஸ்ட்ரி 38 பந்துகளில் 36 ஓட்டங்களும் ஷாதி ராணி 32 பந்துகளில் 29 ஓட்டங்களும் சேர்த்தனர்.

ஸ்கொட்லாந்து அணி தரப்பில் சசிகா ஹார்லே 3 விக்கெட்களை வீழ்த்தினார். 120 ஓட்டங்கள் இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணியால் 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 103 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. தொடக்க வீராங்கனையான சாரா பிரைஸ் 52 பந்துகளில் 49 ஓட்டங்கள் சேர்த்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். பங்களாதேஷ் அணி தரப்பில் ரிது மோனா 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த நிலையில், பங்களாதேஷ் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# சீன ஓபன் ரென்னிஸ் தொடர் அரையிறுதியில் கோகோ காப்

பீஜிங், ஒக். 05

சீன ஓபன் ரென்னிஸில் அமெரிக்காவின் கோகோ காப் அரையிறுதிக்கு முன்னேறினார்.

சீன ஓபன் ரென்னிஸ் போட்டி தொடர் பீஜிங் நகரில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காப், உக்ரைனின் யூலியா ஸ்டாரோடுப்ட்சேவா உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 2 - 6 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த கோகோ காப், ஆட்டத்தின் அடுத்த இரு செட்களை 6 - 2, 6 - 2 என்ற செட் கணக்கில் கைப்பற்றினார். இறுதியில் இந்த ஆட்டத்தில் 2 - 6, 6 - 2, 6 - 2 என்ற செட் கணக்கில் கோகோ காப் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் கோகோ காப் அரையிறுதிக்கு முன்னேறினார். (எ)




# இந்தியா - பங்களாதேஷ் ரி - 20 நாளை ஆரம்பம்

புதுடில்லி, ஒக். 05

இந்தியா - பங்களாதேஷ் அணிகள் இடையிலான ரி - 20 தொடர் நாளை 6ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான ரி - 20 தொடர் நாளை தொடங்குகிறது. (எ)



# ஹர்திக் பாண்டியா காத்திருப்பு

புதுடில்லி, ஒக். 05

பங்களாதேஷுக்கு எதிரான ரி - 20 தொடரில் ஹர்திக் பாண்டியா இன்னும் 5 விக்கெட்கள் வீழ்த்தினால் சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணிக்காக அதிக விக்கெட்கள் கைப்பற்றிய வேகப் பந்து வீச்சாளராக மாறுவார். அதுமட்டுமில்லாமல் 4 விக்கெட்கள் கைப்பற்றினால் பங்களாதேஷ் அணிக்கு எதிராக ரி - 20 கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்கள் கைப்பற்றிய இந்திய பந்து வீச்சாளராகவும் மாறுவார்.

சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணிக்காக அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில்,

யுஸ்வேந்திர சஹல் - 96, புவனேஷ்வர் குமார் - 90, ஜஸ்ப்ரீத் பும்ரா - 89, ஹர்திக் பாண்டியா - 86, அர்ஷ்தீப் சிங் - 83. இதேவேளை, இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்கள் வீழ்த்தியவர்கள் பட்டியலில்,

யுஸ்வேந்திர சஹல் - இந்தியா - 9 விக்கெட்கள்,
தீபக் சாஹர் - இந்தியா - 8,
அல் -அமின் ஹொசைன்- பங்களாதேஷ் - 8,
ரூபெல் ஹொசைன் - பங்களாதேஷ் - 7,
வாஷிங்டன் சுந்தர் - இந்தியா - 7,
ஷகிப் அல் ஹசன் - பங்களாதேஷ் - 7,
ரவிச்சந்திரன் அஸ்வின் - இந்தியா - 6,
ஹர்திக் பாண்டியா - இந்தியா - 6 விக்கெட்கள்.

இந்தியா - பங்களாதேஷ் அணிகள் இடையிலான ரி - 20 தொடர் நாளை ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசு...

கூடுகிறது. இந்தக் கூட்டத்தில், ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் வேட்பாளர் கோரிக்கைகள் மற்றும் அவர்களின் வெற்றி வாய்ப்புகள் தொடர் பில் ஆராய்ந்து முடிவுகளை எடுத்து கட்சியின் உயர்பீடத்துக்கு சிபாரிசுகளை அந்தக் குழு அளிக்கும்.

தமிழ் அரசுக் கட்சியின் இந்தத் தெரிவுக் குழுவில் மாவை சேனாதிராசா, ப. சத்தியலிங்கம், எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், இரா. சாணக்கியன், த. கலையரசன், ச. குகதாசன், சீ. வீ. கே. சிவஞானம், கி. துரைராஜசிங்கம், சேயோன், ரஞ்சினி ஆகியோர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ் அரசியல்...

பௌண்டேசனின் சிங்கள மொழி பெயர்ப்பான "தி இந்தியா வே" என்ற நூலின் முதல் பிரதியையும் அவர் பெற்றுக்கொண்டார்.

இந்தநிலையில், தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினரையும் அவர் சந்தித்துப் பேசுவார் என்று கூறப் பட்டபோதிலும் ஜெய்சங்கருடனான சந்திப்புக்கு எந்தவொரு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. ஒருநாள் பயணம் என்பதால் நேரமின்மையே தமிழ்த் தேசியத் தரப்பினரை அவர் சந்திக்காமைக்கான காரணமாக சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

## சர்வதேசம்...

ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டு இரண்டு வாரங்களாகின்றன. அந்தக் காலத்தை, அவர் சிறப்பாக பயன்படுத்தியுள்ளார்.

இராஜதந்திர செயல்பாடுகளை, மிகச்சரியான முறையில் முன்னெடுத்துள்ளார். முதலில் இந்திய தூதுவருடன் சந்திப்பு, பின்னர் சீனத் தூதுவருடன் சந்திப்பு. இதனை நாம் பார்த்தால், இந்தியாவுக்கே முதலிடம், அதற்கு பின்னரே சீனா என்ற சமிக்ஞையை அவர் வெளிப்படுத்தியுள்ளார். அதன் பின்னர், அனைத்து நாடுகளினதும் தூதுவர்களை அவர் சந்தித்துள்ளார். மேற்குலகம், ரஷ்யா மேலும் பல நாடுகள் அடங்கும்.

இலங்கைக்கு முதலிடம் என்ற வெளிவிவகார கொள்கையே பின்பற்றப் படும் என்ற சமிக்ஞையை அவர் வெளியிட்டுள்ளார். பதவியேற்றதும், அநுரகுமார திஸநாயக்க உடனடியாக கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டார். அவர் அங்கு மகா நாயக்க தேரர்களின் ஆதரவைப் பெற்றார். அதன் பின்னர், தமிழ் முஸ்லிம் அரசியல் மதத் தலைவர்களை சந்தித்துள்ளார். அனைத்து இன சமூகத்துக்குமான இலங்கையை உருவாக்குவதற்கான அவரது வலியுறுத்தல்கள் வலுவானவையாக காணப்படுகின்றன. அவர் வர்த்தக சமூகத்தை நோக்கி, தனது கரங்களை நீட்டியுள்ளார்.

வர்த்தக சமூகத்துடன் இணைந்து நெருக்கமாக பணியாற்றுவதன் மூலமே, வளமான இலங்கையை கட்டியெழுப்ப முடியும். கல்வி, சுகாதாரம் மற்றும் வறியவர்களுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வளங்களை கொண்டுவர முடியும் என்பதை அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அவர் ஊழல் அற்ற குழுவினரை, அரச அதிகாரத்துக்கு கொண்டுவந்துள் ளார். அமைச்சர்களுக்கு, ஆடம்பர கார்களுக்கான சலுகைகளை நிறுத்தியுள்ளார். அரச தலைவர்களுக்கு ஆடம்பர மற்ற வாழ்க்கை என்பதை அவர் இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இவை அனைத்தும், இலங்கையின் பிரச்னைகளுக்கு தீர்வை வழங்காது. இடதுசாரி தலைவர் குறித்து, இராஜதந்திரிகள் மத்தியில் காணப்படும் சந்தேகத்தை இது போக்காது. ஆனால், இது நிச்சயமாக சிறந்த ஆரம்பம். அமைதியான, பல் சமய, பசுமையான, செழிப்பு மிக்க இலங்கையை கட்டியெழுப்ப, அனைவரும் அநுரகுமார திஸநாயக்கவுக்கு உதவ வேண்டும் - என்றுள்ளது. (அ)

## ரணில்...

ஹேரத்தை அவரின் அமைச்சு பணிமனையில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து உரையாடினார் ஜெய்சங்கர்.

இந்தச் சந்திப்பில் இலங்கை - இந்திய நலன் சார்ந்த பல விடயங்கள் குறித்து பேசப்பட்டன. அயல்நாட்டுக்கு முன்னுரிமை என்ற இந்தியாவின் கொள்கை தொடர்பிலும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் நேற்றைய தனது பயணத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பைபேசி...

அதிபர், ஆசிரியர்கள், பிரதேச செய லக உத்தியோகத்தர்கள் மாணவனை பாடசாலைக்கு செல்லுமாறு கூறியுள்ளனர்.

ஆனால், அவர்களின் கருத்தை செவிமடுக்க குறித்த சிறுவன் மறுத்து விட்டார். இந்த நிலையில், சிறுவனின் கைபேசியை தந்தை பறித்து வைத்துள்ளார். இதனால், மனமுடைந்ததாகக் கூறப்படும் மாணவன் கடந்த செப்ரெம்பர் 25ஆம் திகதி வீட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

சிறுவனைக் காணாத பெற்றோர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில், பரந்தனில் தமது வீட்டில் நின்றார் என்றுகூறி சிறுவனை அவரின் உறவினர்கள் கடந்த புதன் கிழமை பெற்றோரிடம் கொண்டுவந்து ஒப்படைத்தனர்.

வீட்டுக்கு வந்த சிறுவன் அதிகாலை 2 மணிவரை கைபேசியில் விளையாடியுள்ளார். பின்னர், வீட்டுக்கு அருகேயுள்ள காணிக்கு சென்று தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்.

சிறுவனின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

## இழுபறி...

க. அருந்தவபாலனை முதன்மை வேட்பாளராக நியமிப்பது என்றும் தீர்மானித்தது.

எனினும், தமிழ் மக்கள் கூட்டணியின் ஆரம்பகால உறுப்பினரான அருந்தவபாலன் தலைமையுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால் கட்சியை விட்டு விலகியிருந்தார். இந்த நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து தலைமையுடனான முரண்பாட்டால் வெளியேறிய மணிவண்ணன் தரப்பினர் கடந்த ஆண்டு ஆரம்பத்தில் தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து கொண்டனர்.

கட்சியின் மத்திய குழு முதன்மை வேட்பாளரை தீர்மானித்த பின்னர், கட்சித் தலைமையுடன் மணிவண்ணன் தரப்பு நடத்திய பேச்சைத் தொடர்ந்து முதன்மை வேட்பாளர் யார் என்பதை பகிரங்கமாக அறிவிப்பதில் கட்சித் தலைமை தாமதம் காட்டி வருகின்றது. இந்த நிலையில், கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்கள் மற்றும் மத்திய குழுவினர் அருந்தவபாலனை முதன்மை வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்றைய தினம் கட்சியின் வேட்பாளர்களை தெரிவதற்கான குழு கட்சியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தலைமையில் கூடியதாக அறிய வருகின்றது. ஆனால், முதன்மை வேட்பாளர் யார் என்பதில் ஏற்பட்ட விவாதத்தைத் தொடர்ந்து இணக்கம் எதுவும் எட்டப்படாமல் கூட்டம் அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது. (ஐ)

# பத்திநாதன், சார்ள்ஸ், டினேசன் தமிழ் அரசின் வேட்பாளர்கள்?

மன்னார், ஒக். 05

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் மன்னார் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன், அ. பத்திநாதன், செ. டினேசன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர் என்று அறிய வருகின்றது.

நேற்றைய தினம் மன்னார் மாவட்டத்துக்கு சென்ற தமிழ் அரசுக் கட்சியின் தெரிவுக் குழு உறுப்பினரான எம். ஏ. சுமந்திரன் இவர்கள் மூவரின் தெரிவையும் இறுதிப்படுத்தினார் என்றும் அறிய முடிகின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்த முறை தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்குவதாக அறிவித்திருந்தார். இந்த நிலையில், சுமந்திரனின் அழைப்பை ஏற்று அவர் மீண்டும் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இவர் தவிர, முன்னாள் வடக்கு மாகாண பிரதம செயலர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன், இளம் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் ஆகியோரும் மன்னார் தொகுதி சார்ந்து போட்டியிடுவர் என்று கூறப்படுகின்றது. எனினும், இவர்களின் தெரிவை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக் குழுவே உறுதிப்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாணய நிதியத்தின் குழுவினர் ஜனாதிபதியுடன் நேற்றும் சந்திப்பு



கொழும்பு, ஒக். 05

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் சர்வதேச நாணய நிதிய (ஐ. எம். எவ்.) பிரதிநிதிகளுக்கும் இடை யிலான இரண்டாவது சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய - பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ண சிறீநிவாசன், சிரேஷ்ட தூதுக் குழு பிரதானி கலாநிதி பீற்றர் ப்ரூயர் உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக்குழுவினர் மற்றும் ஐ. எம். எவ்வுடனான பேச்சுக் காக நியமிக்கப்பட்ட இலங்கையின் பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்ளும் அதேநேரம், மக்கள் சுமைகளை குறைப்பதற்கான மாற்று வழியில் செல்வதே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் நோக்கமாகும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## தமிழ் அரசு கட்சி...

ஆராயப்பட்டது. கூட்டாகத் தேர்தலை எதிர்கொள்ளும் திட்டத்தை தமிழ் அரசின் அரசியல் குழு நிராகரித் தது. அத்துடன், வடக்கு, கிழக்கின் அனைத்துத் தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ் அரசுக் கட்சி தனித்தே தேர்தலை சந்திப்பது என்றும் தீர்மானித்தது.

இதேபோன்று, சிறிய கட்சிகள் தமிழ் அரசுக் கட்சியுடன் கூட்டணி அமைக்க விரும்பியது குறித்தும் பேசப்பட்டது. அவர்களின் ஆதரவை ஏற்பதாகவும் ஆனால், அந்தக் கட்சிகளின் சார்பில் எவருக்கும் இந்தத் தேர்தலில் வேட்புமனு வழங்குவதில்லை என்றும் தமிழ் அரசின் அரசியல் குழு முடிவு செய்துள்ளது என்று அறிய முடிந்தது. (ஐ)

## மாகாண...

இந்த நோக்கத்தை அடைய மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவது உதவும்"- என்றுள்ளது.

மேலும், இந்த சந்திப்பில், இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று தெரிவித்த ஜெய்சங்கர், இலங்கை - இந்தியா இடையேயான ஒத்துழைப்பு மற்றும் நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி அநுரவுடன் விவாதித்தார்.

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரின் வாழ்த்து செய்திகளையும் ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுரவிடம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதியாக அநுர குமார திஸநாயக்க பதவியேற்ற பின்னர் நாட்டுக்கு வருகை தந்த முதல் வெளிநாட்டு பிரமுகர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியாவுக்கு...

அநுரவுக்கு விடுத்தார்.

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஜனாதிபதி அநுரகுமார இந்தியாவுக்கு முதல் பயணத்தை மேற்கொள்வார் என்று அறிய வருகின்றது. (ஐ)

## நிபந்தனை...

குற்றச்சாட்டில் கைதாகி தடுத்து வைக்கப்பட்ட இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்குகள் நேற்று வெள்ளிக்கிழமை இரு நீதிமன்றங்களில் நடைபெற்றன.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நடந்த வழக்கில் கடந்த மாதம் 4, 7ஆம் திகதிகளில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த 18 இந்திய மீனவர்கள் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் நளினி சுபாகரன், 13 இந்திய மீனவர்களை நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்தார். அத்துடன், படகு ஓட்டுநர்கள் மூவருக்கும் படகின் உரிமையாளர் ஒருவருக்குமாக நால்வருக்கு தலா ஓராண்டு சிறையும் இரண்டாவது முறையாக இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்தவருக்கு ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனையும் விதித்தார்.

இதேநேரம், கடந்த செப்ரெம்பர் 21ஆம் திகதி பருத்தித்துறை கடலில் 3 படகுகளுடன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 37 இந்திய மீனவர்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிவான் பொ. கிரிசாந்தன், 33 மீனவர்களை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்த தலா ஒரு வருட சிறைத் தண்டனை, 3 மீனவர்களை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்த தலா 16 மாத சிறைத் தண்டனை, ஒருவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைத்த 20 மாத சிறை தண்டனை என்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# குவியும் கோரிக்கையால் நெருக்கடியில் அநுர கட்சி

## வேட்புமனு தயாரிப்பதில் பெரும் சிரமம்

கொழும்பு, ஒக். 05

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் தம்மை வேட்பாளர்களாக முன்னிறுத்துமாறு தேசிய மக்கள் சக்தி கட்சியிடம் அதிகளவானர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இதனால் அக்கட்சியின் தலைவர்கள் வேட்புமனு தயாரிப்பதில் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொது தேர்தலுக்கான வேட்புமனு தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதிக கோரிக்கை தேசிய மக்கள் சக்தி கட்சிக்கே உள்ளதாக கூறப்படுகின்றது.

தங்கள் கோரிக்கைகளை ஏற்குமாறு பெருந்தொகை விண்ணப்பங்கள் வருவதாகவும் அதனை கட்டுப்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, கடந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு உதவிய நிபுணர்கள், ஆய்வாளர்கள் உள்ளிட்ட பலரது கோரிக்கைகளும் கிடைத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வடக்கு ஆளுநர் அலுவலகத்தின் பொதுமக்கள் தினமாக திங்கட்கிழமை!

யாழ்ப்பாணம், ஒக். 05

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் பொதுமக்கள் தினமாக எதிர்வரும் திங்கட்கிழமை 07 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநருடன் பொதுமக்கள் தங்களுடைய பிரச்சினைகளை நேரடியாக அலுவலக நேரங்களில் கலந்துரையாடுவதற்காக - ஏற்கனவே பொது மக்கள் தினமாக இருந்த புதன்கிழமைக்கு பதிலாக திங்கட்கிழமை பொதுமக்கள் தினமாக மாற்றப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# முன்னாள் ஜனாதிபதியின் வீட்டின் முன் கத்தி கூச்சலிட்ட பெண்ணால் பதற்றம்!

கொழும்பு, ஒக். 05

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோக பூர்வ இல்லமுன்றிலில் காரொன்றில் வந்திறங்கிய பெண்ணொருவர் கத்தி கூச்சலிட்டு முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு கடும் வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், அவரை கைதுசெய்வதற்காக தீவிர விசாரணைகளை கொழும்பு - கறுவாத் தோட்டப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோக பூர்வ இல்லத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மேற்படி சம்பவம் குறித்து முறைப்பாடளித்துள்ளதாக குறித்த பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பெண் வந்திறங்கிய வெள்ளைநிற காரின் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த பெண் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும் வர்த்தகருமான டட்லி சிறிசேனவை குறிப்பிட்டே கடும் வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்ததாக மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பெண் வந்திறங்கிய காரின் இலக்கம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கறுவாத்தோட்டப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# ஜனாதிபதிக்கு ஆதரவானவர்கள் அரச உயர்பதவிகளில் நியமனம்

## சஜித் தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 05

அரச சேவைகளில் பொருத்தமான நபர்களுக்குப் பதிலாக, ஜனாதிபதிக்கு ஆதரவானவர்கள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதால் அரச துறை பிரச்சனையை எதிர்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் அண்மைக்கால அரச சேவைகளுக்கான நியமனங்கள் அவரது தேர்தல் பிரசாரத்துக்கு ஆதரவாக இருந்தவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான அரச துறை ஊழியர்கள் ஜனாதிபதி திஸாநாயக்கவுக்கு வாக்களித்தனர்.

60 வீதம் முதல் 70 வீத வாக்குகள் தேசிய மக்கள் சக்தியினருக்கு கிடைத்தமை அஞ்சல் வாக்குகள் இதை நிரூபிக்கின்றன.

எவ்வாறாயினும், அரச சேவைகளில் பொருத்தமான நபர்களுக்குப் பதிலாக, ஜனாதிபதிக்கு ஆதரவானவர்கள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதால் அரச துறை ஒரு பிரச்னையை எதிர்கொள்கிறது.

அரச துறையினர் இதனை எதிர்பார்க்கவில்லை. அரச சேவைகளுக்கு அரசியல் ரீதியாக நியமனம் பெற்றவர்களை ஜனாதிபதி அகற்றி, தகுதியான ஊழியர்களுக்கு இத்துறையில் மேல்நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பை வழங்குவார் என எதிர்பார்க்கின்றோம்.

அரச சேவைகளுக்கு அரசியல் நியமனம் பெற்றவர்கள் மீது கடந்த காலத்தில் தேசிய மக்கள் சக்தி எழுப்பிய குற்றச்சாட்டுகள், வாக்குறுதி அளித்தபடி மாற்றங்களைச் செயல்படுத்தாமல், புதிய நிர்வாகத்தால் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன.

இது எதிர்காலத்தில் அரச துறைக்குள் நெருக்கடியை ஏற்படுத்தும் - என்றார். (அ)

# பஸ் நடத்துநர்களின் விதிமீறல்கள்; முறைப்பாடளிக்க விசேட இலக்கம்

கொழும்பு, ஒக். 05

பஸ்ஸில் பயணிகளிடம் கட்டணம் அறவிட்ட பின்னர் அதற்கான பயணச்சீட்டையும் மிகுதிப் பணத்தையும் வழங்காத நடத்துநர்கள் தொடர்பில் முறைப்பாடளிக்க முடியும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டு, குறித்த முறைப்பாடுகளை முன் வைக்க முடியும் என அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

# பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடார் பந்துல!

கொழும்பு, ஒக். 05

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று தெரிவித்தார்.

இருபது வருடங்களுக்கும் மேலாக ஹோமாகம தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர், பிரதியமைச்சர், அமைச்சர் என பல பதவிகளை வகித்து தன்னால் இயன்றவரை மக்களுக்கு சேவையாற்றியதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மக்கள் பிரதிநிதி இல்லாமல் பல வருடங்களாக அநாதரவாக இருந்த ஹோமாகம தொகுதி மக்களுக்காக, இந்த நகரத்தை அறிவு கேந்திர நகரமாக மாற்றுவதற்கு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளதை எண்ணி தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அடுத்த சில வருடங்களில் மீண்டும் கலாநிதி பட்டம் ஒன்றுக்காக கற்கைநெறியை மேற்கொள்ளவுள்ளதாகவும், சினிமா திரைப்படம் தயாரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பழைய தொழிலுக்கு திரும்பிய அலி சப்ரி!



கொழும்பு, ஒக். 05

நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது சட்டம் சார் தொழிலுக்குத் திரும்பியுள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர்,

“என்னுடைய இடத்திற்குத் திரும்புவது மகிழ்ச்சியாக இருக்கிறது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் முக்கிய உறுப்பினரான அலி சப்ரி, தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்.

அவர் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரின் அரசாங்கத்தின் கீழ் நீதி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சராகப் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நான்கு மாகாணங்களை மிரட்டும் டெங்கு நோய்!

கொழும்பு, ஒக். 06

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 39,698 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது 16,766 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், இம்மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும், வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 4,792 நோயாளர்களும்,

மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் 4,091 நோயாளர்களும், சப்ரகமுவ மாகாணம், கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் 4,012 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 19 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org